செ.வெ.எண்.332/2009/செமதொஅ நாள்: 08.10.2009

**திருக்கழுக்குன்றம், அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் பள்ளி மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கினார்.**

திருக்கழுக்குன்றம், அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் இலவச மிதிவண்டி வழங்கும் விழா நடைபெற்றது. விழாவில் மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்கள் கலந்து கொண்டு பள்ளி மாணவிகளுக்கு இலவச மிதிவண்டி வழங்கி விழாப் பேருரையாற்றியதாவது,

பள்ளியில் படிக்கின்ற மாணவ செல்வங்களுக்கு இலவச மிதிவண்டி வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதற்காக ரூ.9147 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார். இந்தியாவில் தமிழகம் தான் கல்விக்காக அதிக நிதிஒதுக்கீடு வழங்கியுள்ள மாநிலமாகும். மாணவர்கள் சிறப்பாக கல்வி பயில வேண்டும் என்பதற்காக ரூ.360 கோடியில் 31,897 வகுப்பறைகள் புதியதாக கட்டப்பட்டுள்ளன. நடப்பாண்டில் ரூ.760 கோடியில் 849 புதிய பள்ளி கட்டடங்கள், சோதனைக் கூடம், குடிநீர்வசதி, கழிப்பிட வசதி போன்ற வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. தொகுப்பூதியம் பெற்ற 42,921 ஆசிரியர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. புதியதாக 44,300 ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. நடப்பாண்டில் 12 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளன. மாணவ செல்வங்கள் கல்வியில் சிறந்து விளங்க இலவச பேருந்து பயண அட்டை, இலவச சீருடை, இலவச பாடபுத்தகம், கல்வி கட்டணம் ரத்து ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது.

மாணவ பருவம் கிடைக்காத அரிய பருவம். இந்த பருவத்தில் மிக சிறப்பாக கல்வி பயில வேண்டும். இந்த பள்ளியில் முந்தைய ஆண்டு 83 சதவீதமும், சென்ற ஆண்டு 92 சதவீதமும், இந்த ஆண்டு 80 சதவீதமும் தேர்ச்சி பெற்றுள்ளீர்கள். மிக சிறப்பாக செயல்பட கூடிய பள்ளிகளில் இதுவும் ஒன்று. அனைத்து மாணவ-மாணவிகளும் சிறப்பாக கல்வி பயின்று பொறியாளர்களாகவோ, மருத்துவர்களாகவோ வரவேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவிலேயே கல்வித்துறைக்காக 2 அமைச்சர்கள் நியமிக்கப்பட்டது தமிழகத்தில் தான். வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. இங்கு ஆசிரியர் காலிபணியிடங்கள் நிரப்பப்பட வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளீர்கள். மேற்படி காலிபணியிடங்கள் விரைவில் நிரப்பப்படும் என தெரிவித்தார்.

இந்த விழாவில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு.வி.தமிழ்மணி தலைமை வகித்தார். மாவட்ட வேளாண் விற்பனைக்குழுத் தலைவர் திரு.வி.எஸ்.இராமகிருஷ்ணன், ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சம்பூரணம் தேவதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்விகுழு தலைவர் திருமதி.ஜீவரேகா துரை, பெற்றோர் ஆசிரியர் கழகத்தலைவர் திரு.ஜெ.கௌதம், தொலைபேசி ஆலோசனைக்குழு உறுப்பினர் திரு.பெ.தேவதாஸ், பேரூராட்சி உறுப்பினர் திரு.ஜி.துரை, ஒன்றியக்குழு துணைத்தலைவர் திரு.ஏ.சரவணன் ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். முன்னதாக திருக்கழுக்குன்றம் அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் திரு.வ.இராதாகிருஷ்ணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். முடிவில் உதவி தலைமை ஆசிரியர் திரு.சோ.கஸ்தூரி அவர்கள் நன்றி கூறினார். விழாவில் ஏராளமான மாணவ-மாணவிகளும், அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

வெளியிடுபவர்

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.